

# அப்பாவைக் காணோம்

1993 ஆம் ஆண்டு நடந்த ஈழத்துப் போரில் விடுதலை புலிகள் தமது வீரத்தை நிலை நாட்டிய பிரசித்தமான கிராமம் பூநகரி. ஒரு காலத்தில் குதிரை முனையில் இருந்து ஆண்ட அல்லிராணியின் ,மாளிகைக்கு பூநகர் ஏரிக்கு அருகே இருந்த பூந்தோட்டத்தில் இருந்து பூக்கள் போனதால் அவ்வூருக்கு அப்பெயர் வந்தது என்று அவூர்வாசிகள் சொல்வார்கள்.
அசோக சக்ரவர்த்தியின் மகன் மகிந்தாவும், .மகள் சங்கமித்தா வெள்ளரசுக் கிளையோடும், கஜபாஹு மன்னன் சேரநாட்டில் இருந்து கண்ணகி சிலையோடும் யாழ் குடாநாட்டில் வடக்கே உள்ள மாதகலுக்கு அருகே உள்ள ஜம்புகோள துறைமுகத்தில் வந்து இறங்கி பூநகரி ஊடாக தென் பகுதிக்குச் சென்றதாக வரலாறு சொல்கிறது . இப்போது பூநகரில் இருந்து சங்குப்பிட்டி பாலத்தின் வழியே யாழ்குடாநாட்டுக்குப் போவது இலகு .

***

பூநகரி வாசிகள் பெரும்பாலோர் விவசாயிகலும் மீன் பிடி தொழில் புரிபவர்ககள் . மொட்டக்கருப்பன், முத்துச் சம்பா போன்ற உயர் தர அரிசிகள் விளையும் பசுமையான நெற் காணிகள் நிறைந்த ஊர். விவசாசிகளுக்கென ஒரு சங்கம் இருந்தது. அச் சங்கத்தின் தலைவர் சிவா என்று எல்லோராலும் அழைக்கப்படும் சதாசிவம் ஒரு விவசாயி. சிவாவுக்கு பூநகரியில் பத்து ஏக்கர் காணி இருந்தது. தன் கடும் உழைப்பால் வளர்ந்தவர். அவர் தாய் மாமனின் ஒரே மகள் பாக்கியலட்சுமியை திருமணம் செய்தவர் .
அவள் அவருக்கு மனைவியாக வரும்போது கூடவே பதினைந்து பரப்பு நெற் காணியை சீதனமாகக் கொண்டு வந்தாள். ஏர் பிடித்து உழுது நெல் விதைத்து

ஊருக்கே சோறு போட்ட உழவன் சிவா. திடகாத்திரமான உடலமைப்பை கொன்டவர் சிவா ஒரு போதும் நோய் நொடி என்று படுத்ததில்லை. தன் விவசாயத்தின் திறமையினால் இரு காணிகளிலும் ஆரம்பத்தில் ஏர் பிடித்து உழுது காணியில் அதிக விளைச்சலைப் பெற்றார் . மாகாணத்தில் அவரின் காணியில் விளைச்சல் அதிகமானபடியால் அரசு அவரைப்பாராட்டி “விளைச்சல் வீரன்” என்ற விருதும், அதோடு பரிசாக உழுவதற்கு டிரக்டரும் அதை இயக்கும் பயிற்ச்சியையும் அரசு தன் செலவில் கொடுத்தது. தனது கடும் உழைப்பின் மூலம் விளைச்சலில் கிடைத்த வருமானத்தால் தன் ஒரே மகன் மகாதேவனை பட்டதாரியாக்கி, பூநகரியில் தன் சகோதரியின் மகள் சரஸ்வதிக்கு திருமணம் செய்து வைத்தார் . இரு பேரப்பிள்ளைகளுக்குப் பாட்டன் ஆனார். முழுக் குடும்பமே பூநகரி சித்தன் குறிச்சியில் உள்ள பூர்வீக வீட்டில் வாழ்ந்தது. மகாதேவன் தந்தையைப் போல் விவசாயத்தில் ஆர்வம் காட்டாது ஆசிரியர் தொழில் செய்தான். தன் தந்தை வெறும் மேலுடன் காணயில் உழுவதை அவன் விரும்பவில்லை.

பூநகரி சித்தன் குறிச்சி முருகன் கோவில் யாழ்நகரில் சித்தர்பரம்பரை உருவாக முன்னர் அங்கு இருந்த சித்தர்கள் ஞானிகள் வழிபட்ட முருகன் கோவில் என்பது கோவில் வரலாற்றின் தொன்மையாகும்

இலங்கை இராணுவம் பூநகரியை திரும்பவும் விடுதலை புலிகளிடம் இருந்து கைபற்றியது; அதன் விளைவால் சதாசிவத்தின் வயல்காணியில் முகாம் போட்டது. இந்த இராணுவ ஆக்கிமிப்பிபால் சொந்தக் காணியில் சிவாவால் விவசாயம் செய்ய முடியவில்லை அக்கோவிலும் இராணுவத்தால் சிதைக்கப் பட்டது. கோவில் இராணுவத்தால் சிதைக்முன் அக்கோவிலின் மெய்காப்பாளராக விவசாயி சதாசிவம் அக்கோவிலை தன் சொந்த செலவில் நடத்திவந்தார் வருடா வருடம் பொங்கிப் படைத்தார் . அக்கோவில் சிதைந்தது சதாசிவத்தை வெகுவாக பாதித்தது . வீட்டில் முடங்கிக் கிடக்க அவரால் முடியவில்லை . அவர் மனதை அவர் வாழ்வில் நடந்த சம்பவங்கள் வெகுவாக பாதித்தன..

தினமும் இடிந்த கோவிலையும், ஆக்கிரமித்த தன் காணியையும் போய் தூரத்தில் நின்று பார்த்து கண்ணீர் விட்டு அழுவார் அவரின் மகன் மாகதேவன் ஓரு பலசரக்குக கடை அமைத்து தருகிறேன் அப்பா நடத்துங்கள் என்று வேண்டியும் அவர் மறுத்து விட்டார். என்றோ ஒரு நாள் தன் காணி தனக்குத் திரும்பி வரும் என்று எதிர்பார்த்து இருந்தார் சிவா.

அதிகாலையில் எழும்பி பல்தேய்த்து குளித்து விட்டு மனைவி கொடுத்த கோப்பியையும் பலகாரத்தையும் சாப்பிட்டபின் வெளியில் போய் வெகு நேரம்

கழித்தே வீடு திரும்புவார். எவரைபானும் அதிகம் பேசமாட்டார். அவர் முகத்தில் எதையோ இழந்தது போன்ற எக்கம் சதாசிவம் எங்கே போகிறார் என்பது எவருக்கும் புரியாத புதிர். குளத்தடியிலும், இராணுவ முகாம் இருந்த இடத்துக்கு அருகே உள்ள ஒரு சிறு பாழடைந்த குடிசையிலும். சிதைந்த முருகன் கோவிலடியயிலும் சிவாவைக் சிலர் கண்டதாக மகாதேவனுக்கு சொன்னார்கள் . “அம்மா அப்பாவுக்கு இராணுவ முகாமுக்கு அருகே உள்ள பாழடைந்த குடிசையில் என்ன வேலை.”?

”இப்போ புரியுது மகன் உன் அப்பாவுக்கு பழம் சோறும் மீன் குழம்பும், பச்சை மிளகாய், ஊறுகாயோடும் பகல்; போசனதை வயல் வரம்பில் நடந்து அவருக்கு கொண்டு போய் அந்த குடிசையில் வைத்து என் கையால் கொடுப்பதை ரசித்து உண்பார். சில சமயம் அவருக்கு விரும்பிய பனம் கள்ளும் கொண்டு போய் கொடுப்பன் . நாங்கள் இருவரும் ஒன்றாக சேர்ந்து சாப்பிடுவோம். அந்த நினைவில் அவர் அந்தக் குடிசைக்குப் போயிருக்கலாம் மகன்” மகாதேவனின் தாய் சொன்னாள்.

“அம்மா அது ஆபத்தான இடமாயிற்றே. அப்பாவுக்கு பல தடவை சொன்னேன் ஆர்மி முகாம் இருக்கும் பக்கம் போகவேண்டாம். சிங்கள ஆர்மிகாரனுக்கு தமிழர்களை பிடிக்காது என்று. அவனின் நினைப்பு தமிழர்கள் எல்லாம் விடுதலைப் புலிகள் இயக்கத்தை சேர்ந்தவர்கள் என்று. “

"ஏன் அப்படி சொல்லுறாய் மகன்? அப்பாவுக்கு விடுதலைப் புலிகள் சண்டை போடுவது பிடிக்காது. அவர் எப்போதும் சமாதானத்தை விரும்புபவர் . யாழ் குடாநாட்டில் இருந்து மக்கள் கிலாலி ஏரியூடாக புலம் பெயர்வு தேவை இல்லாதது என்று சொல்லுவார். பெடியங்கள் ஏன் சண்டை போடுறாங்கள் என்று தனக்கு தெரியவில்லை என்று அடிக்கடி எனக்குச் சொல்லி கவலைப் படுவார் ”

“அந்தக் குடிசை இராணுவ முகாமுக்கு அருகே உள்ளது. அதனால் அப்பா அங்கே போவது ஆபத்து அம்மா “

“மகன் உன் அப்பாவைப் பற்றி உனக்குத் தெரியும் தானே. அவர் சரியான பிடிவாதக்காரர் . தான் நினைத்ததை செய்வார். அவருக்கு அவரின் குடும்பத்தை அடுத்து அவரின் காணி மேல் மிக பற்றுதல் வைத்திருக்கிறார் . போருக்குப் பின் எங்கள் காணியை இராணுவம் ,ஆக்கிரமித்து விட்டது . நல்ல விளைச்சல் இருந்த காணியில் இராணுவ முகாம் அமைத்து விட்டது. அவர்களுக்கு எங்கே தெரியப் போகுது அந்த மண்ணின் பெருமையும். பெறுமதியும் . அதோடு அக் காணியில் புத்தர் சிலை ஒன்று தோன்றி விட்டதாக அயலார் சொல்லிக் கேள்வி

. கொஞ்ச காலம் போனால் சிங்களக் குடும்பங்களைக் கொண்டு வந்து குடியேற்றி விடுவார்கள். ஆர்மியை தட்டிக் கேட்க ஒருவரும் இல்லை. இதெல்லாம் அரசின் ஆதரவுடன் நடக்கிறது . அந்த குடிசையில் இருந்து தன் காணியைப் பார்த்து பழைய நினைவுகளை மீட்டு மனக் கவலையைப் போக்க அப்பா போயிருக்கலாம் அல்லவா”?

” அம்மா இதேல்லாம் இராணுவத்துக்கு புரியவாப் போகுது?
வீட்டில் இருந்து போன அப்பா இரண்டு நாட்களாக ஏன் வீடு திரும்பவில்லை என்று பூநகரி பொலீசுக்குச்கு முறையிட்டு அவர்களோடு போய் தேடிப் பார்க்கிறேன் . அவர் கிடைப்பார் என்ற நம்பிக்கை எனக்குண்டு அம்மா” .

***

மாகதேவன் விதானையாரின் உதவியோடு போலீசில் தன் தந்தையை இரு நாட்களாக காணவில்லை என்று முறையிட்டான். ஒரு போலீஸ்காரனின் உதவியோடு மகாதேவன் சிவாவை பூநகரி முழுவதும் தேடி இறுதியில் இராணுவ முகாமுக்கு அருகில் உள்ள குடிசையை நெருங்கிய போது ஒரு துர்நாற்றம் மூக்கை துளைத்தது . அங்கு அவர்கள் பார்த்த காட்சி அவர்களை அதிர வைத்தது. சதாசிவத்தின் உடல் அழுகிய நிலையில் நிலத்தில் கிடந்தது. தந்தை சூடு பட்டு இறந்தார் என்ற என்று புரிந்து கொள்ள பொலீசுக்கும் மகாதேவனுக்கும் அதிக நேரம் எடுக்கவில்லை . பொலீஸ்காரன் முகாமுக்கு பொறுப்பாக இருந்த இராணுவ அதிகாரியிடம் விசாரித்ததில் ஒரு வேளை அனைத் குடிசைக்கு அனைத் மனிதன் அடிக்கடி வந்து போவதாயி கண்டு இராணுவத்தில் ஒரு சோல்ஜர் விடுதலை புலிகளின் ஒற்றன் என்ற சந்தேகத்தில் அவரை சுட்டிருக்கலாம்” காரணம் சொன்னார். ,

தன் காணிமேல் மேல் உள்ள பற்றுதலால் தன் உயிரையும் பணையம் வைத்து தன் காணியின் நிலையைப் பார்க்க சென்ற தன் தந்தையின் துணிவை நினைந்து மகாதேவன் பெருமைப்பட்டன்.

****

காலப் போக்கில் பல பிற நாட்டு அழுத்தங்காளால் இராணுவம் அபகரித்த அந்தக் காணியை விட்டுச் சென்றது. காணிக்கு உருத்தான மகாதேவுகனுக்கு இரரணுவம் கையளித்தது .தன தந்தையை விரும்பிய காணி சீரழிந்து போகா கூடாது என்ற முடிவுக்கு வந்த மகாதேவன் தன் ஆசிரியர் தொழிலை விட்டு .மீட்ட காணியில் தன் தந்தையின் விவசாயத் தொழிலில் ஈடு பட்டான். அவனின் மனவி சரஸ்வதியும் பழம்சோறும் மீன் குழம்பும் பனம் கள்ளும் மாமியார் மாமனுக்கு செய்தது போல் கணவனுக்கு எடுத்துச் சென்றாள்.

****